# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **செல்வி. N. திலகேஸ்வரி, B.Sc., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2024-ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 06-ஆம் நாள், சனிக்கிழமை

**I.A. No. 2 of 2022 in O.S. No. 297 of 2014**
**(CNR No. TNSA13000069-2014)**

1. G. சந்திரன்
2. G. கண்ணதாசன் .. மனுதாரர்கள் / வாதிகள்

எதிராக

P. சின்னப்பா .. எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 14.03.2024-ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. T. சுப்பராயன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. V.R. ராஜேந்திர மகாஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவுரை

மனுதாரர்கள் / வாதிகள் இம்மனுவை வழக்குரையை திருத்தம் செய்வதற்கு தாக்கல செய்துள்ளனர்.

2. **மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :** மனுதாரர்கள் / வாதிகள் தங்களுடைய

மனுவில் வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் எதிர்மனுதாரர் / பிரதிவாதி தாவா சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து வலுக்கட்டாயமாக சொத்துக்களின் சுவாதீனத்தை எடுத்துக் கொண்டதாகவும், இது சம்மந்தமாக தாங்கள் மறுப்புரை தாக்கல் செய்திருப்பதாகவும், 02.09.2018 தேதியன்று எதிர்மனுதாரர் / பிரதிவாதி தன்னுடைய வைப்பு மனைவியான மூக்காயி என்பவருடன் தாவா சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து மனுதாரர்கள் / வாதிகளை தாவா சொத்திலிருந்து வெளியேற்றிவிட்டு அதில் ஆக்கிரமிப்பு செய்துவிட்டதாகவும், இது தொடர்பாக 02.09.2018 தேதியன்று கெங்கவல்லி காவல்நிலையத்தில் தான் புகார் அளித்திருப்பதாகவும், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு புகார் அளித்துள்ளதாகவும், பிரதிவாதியின் பேச்சைக் கேட்டுக்கொண்டு காவல்துறையினர் தான் கொடுத்த புகார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், 20.12.2019 தேதியன்று தாங்கள் மறுப்புரை தாக்கல் செய்திருப்பதாகவும், இது தொடர்பாக வழக்குரையை திருத்தம் செய்யும்படி தாங்கள் அறிவுறுத்தியதாகவும், எதிர்மனுதாரர் / பிரதிவாதி வலுக்கட்டாயமாக வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் தாவா சொத்தின் சுவாதீனத்தை தன்னிடமிருந்து எடுத்துக் கொண்டதால் அது தொடர்பாக வழக்குரையை திருத்தம் செய்யப்பட வேண்டுமென்றும், எனவே மனு அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

3. **<u>எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :</u>** எதிர்மனுதாரர் / பிரதிவாதி தன்னுடைய எதிருரையில் மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றும், எதிர்மனுதாரர் / பிரதிவாதி தான் தாவா சொத்தின் பூரண உரிமையாளர் என்றும், அது தனக்கு 23.03.1989 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தின் மூலம் பாத்தியப்பட்டது என்றும், தான் தான் தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருவதாகவும், மனுதாரர்களின் தகப்பனார் 08.05.1992 மற்றும் 02.06.2003 தேதிகளில் மோசடியான கிரய ஆவணங்களை ஏற்படுத்தியிருப்பதாகவும், அதன் மூலம் தன்னிடமிருந்த சொத்துக்களை அபகரிக்க முயற்சி செய்ததாகவும், 06.02.2014 தேதியன்று காலை 7.30 மணிக்கு மனுதாரர்கள் தாவா சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து எதிர்மனுதாரரின் குடும்ப உறுப்பினர்களை

தாக்கிவிட்டு சேதப்படுத்தியதாகவும், தாங்களும் இது குறித்து கெங்கவல்லி காவல்நிலையத்தில் புகார் அளித்திருப்பதாகவும், மனுதாரர்கள் / வாதிகளுக்கு அந்த வழக்கில் பெயில் கிடைத்தவுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துவிட்டதாகவும், எனவே தான் தான் தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருவதால் அதில் அத்துமீறி நுழைய வேண்டிய அவசியம் இல்லை என்றும், மனுவில் கூறப்பட்டுள்ள காரணங்கள் அனைத்தும் பொய்யானது என்றும், மனுவில் கேட்கப்பட்டுள்ள பரிகாரங்கள் காலவரையறையினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. அசல் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கினை மனுதாரர்கள் / வாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளனர். அதற்கு எதிர்மனுதாரர் / பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையில் தனக்கு தாவா சொத்து 23.03.1989 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தின் மூலமாக தன்னுடைய சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருவதாக கூறியுள்ளார் என்பதும் தெரியவருகிறது. மனுதாரர்கள் / வாதிகள் 15.02.2021 தேதியன்று தாக்கல் செய்துள்ள மறுப்புரையில் பதிலுரை சங்கதிகளை மறுத்து 02.09.2018 தேதியன்று எதிர்மனுதாரர் / பிரதிவாதியும் அவருடைய வைப்பு மனைவியும் தாவா சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து தங்களை வெளியேற்றிவிட்டு சொத்தின் சுவாதீனத்தை எடுத்துக் கொண்டதாக கூறியுள்ளனர் என்பது தெரியவருகிறது. தற்போது மனுதாரர்கள் / வாதிகள் இம்மனுவை 07.12.2021 தேதியன்று வழக்குரையை சுவாதீனத்தை திரும்ப ஒப்படைக்குமாறு செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரம் வேண்டியும், தாலுக்காவை மாற்றம் செய்வது சம்மந்தமாகவும், வழக்குரையை திருத்தம் செய்வதற்காக மனு தாக்கல் செய்துள்ளனர். 02.09.2018 தேதியன்று எதிர்மனுதாரர் / பிரதிவாதி தாவா சொத்தின் சுவாதீனத்தை எடுத்துக் கொண்டதாக மனுதாரர்கள் கூறியுள்ளனர். செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டுவதற்குண்டான காலவரையறை வழக்கிற்கான வழக்குமூலம் எழுந்த தேதியிலிருந்து மூன்று வருடங்களுக்குள்ளாக

பரிகாரம் கோரப்பட்டிருக்க வேண்டும். இம்மனுவானது வழக்குமூல தேதியான 02.09.2018 தேதியிலிருந்து மூன்று வருடங்கள் கழிந்து 07.12.2021 தேதியன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோருவதற்குண்டான காலவரையறைச் சட்டம் ஷரத்து 135-ன்படி 3 வருட காலத்திற்குள்ளாக மனு தாக்கல் செய்யப்படாததால் செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரம் குறித்தான வழக்குரை திருத்தத்தை அனுமதிக்க இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. வழக்கு சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் யார் இருக்கிறார்கள் என்பது குறித்து இருதரப்பினர்களின் சாட்சியத்தின் அடிப்படையில் வழக்கின் இறுதியில் தான் முடிவு செய்ய இயலும். தற்போது இம்மனுவில் அது குறித்து முடிவு செய்ய இயலாது. தாலுக்கா பெயர் மாற்றம் சம்மந்தமாக மட்டும் இந்நீதிமன்றம் இம்மனுவை அனுமதிக்க முடிவு செய்து அதை பொறுத்தமட்டிலும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

6. இறுதியாக இந்நீதிமன்றம் இம்மனுவை பகுதியாக அனுமதித்து மனு உத்தேச திருத்தம் பத்தி எண்.5-ஐ பொறுத்து மட்டும் இம்மனுவை செலவுத் தொகையின்றி உத்தரவிடுகின்றது.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2024-ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 06-ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(**Sd**/- **N**. திலகேஸ்வரி)

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**ஆத்தூர்.**

| | |
|---|---|
| மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு சாட்சிகள் : | இல்லை |

**.. 5 ...**

<u>மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை

<u>எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை

<u>நீதிமன்ற சாட்சிகள் </u>: இல்லை

<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> : இல்லை

(**Sd**/- **N**. திலகேஸ்வரி)

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

மு.மா.உ.நீ., (மு.கூ.பொ.) ஆத்தூர்.

<u>கூ.மா.உ.நீ., ஆத்தூர்.</u>

இ.ம.வ. எண் 2/2022

---------------

அ.வ. எண் 297/2014

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 06.04.2024